# குச்சவெளிப் பிரதேச சபை

## திருகோணமலை மாவட்டம்.

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டு மற்றும் 2009 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 யூன் 30 வரையும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2 கொடுக்கல் வாங்கல்கள், செயற்பாடுகள் மற்றும் செயலாற்றல் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 வங்கிக் கணக்குகள்

வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களைப் பகுப்பாய்வு செய்து பின்வரும் கூற்றில் தரப்படுகின்றது.

| விபரங்கள் | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | காலப்பகுப்பாய்வு | | | |
|---|---|---|---|---|---|
| | | 6-12 மாதங்களுக்குக் குறைவு | 1-3 வருடங்கள் | 3 வருடங்களுக்கு மேல் 9 வருடங்களுக்குக் குறைவு | மொத்தம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வழங்கப்பட்டிருந்தும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் | 103 | 171,963 | 69,185 | 70,590 | 311,738 |
| | 103 | 171,963 | 69,185 | 70,590 | 311,738 |

**1.2.2 தொங்கல் கணக்குகள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொங்கல் தன்மையான கணக்குகளில் ரூபா 9,114 தொகையான வரவு மீதிகள் உள்ளன.

**1.2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

பதிவேடுகள், பேரேடுகள் மற்றும் உறுதிப்படுத்தல்கள் போன்றன இன்றிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 4,628,692 ஆகும்.

**1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

**(அ) பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்**

2011 யூன் 30 இல் உள்ளவாறு 53 கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்காத அதேவேளை அக்கணக்காய்வு ஐயவினாக்களுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல்களின் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 9,136,081 ஆகும்.

**(ஆ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள்**

கணக்காய்விற்குச் அவசியமான தகவல்கள் காணப்படாமையினால் ரூபா 386,411 பெறுமதியான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தன.

**1.2.5 இணங்காமைகள்**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | |
| (i) 152 ஆம் பிரிவு | தொழில் தகைமை வரிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 1989 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிகள் | |
| (i) பகுதி II இன் 16(1) ஆம் பிரிவு | பிரதேச சபையானது அசையும் மற்றும் அசையாத சொத்துக்களுக்கான பதிவேட்டினைப் பேணியிருக்கவில்லை. |
| (ii) அத்தியாயம் I இன் 5(xii) ஆம் பிரிவு | காசு, களஞ்சியம் போன்றவைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து போதுமான அளவு பிணை பெறப்பட்டிருக்க வில்லை. |
| (iii) அத்தியாயம் XII இன் இல. 214 | ஆண்டின் இறுதியில் பின்வரும் இருப்பு விடயங்கள் கணிப்பீட்டுச் சபையினால் மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.<br>i நிலையான சொத்துக்கள்<br>ii காகிதாதிகள்<br>iii வாகனங்கள்<br>iv கட்டிட விண்ணப்பப்படிவங்கள்<br>v பழைய செய்திப் பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் |
| (vi) அத்தியாயம் XII இன் 217 ஆம் பிரிவு | காணி மற்றும் கட்டப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) நிதிப்பிரமாணம் 396 | (i) 03 வருடங்களுக்கும் மேலான காலம் தேறாதிருந்த ரூபா 15,605 பெறுமதியான காசோலைகளை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>(ii) 01 வருடத்திற்கும் மேலாக கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப் படாதிருந்த ரூபா 311,738 |

பெறுமதியான காசோலைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 வருமான நிர்வாகம்

#### 2.1.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடரபான நிலைமை கீழே தரப்படுகின்றன.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | வருமான விடயம் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
| | | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| (i) | இறைகளும் வரிகளும் | 15,204 | 4,090 | 11,114 | 12,629 | 846 | 11,783 |
| (ii) | வாடகைகள் | 636 | - | 636 | 640 | 4 | 636 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் | 789 | 1,023 | - | 408 | 643 | - |
| (iv) | வேறு வருமானங்கள் | 534 | 534 | - | 4,197 | 4,197 | - |

#### 2.1.2 நீதிமன்ற தண்டப்பணங்கள்

பல்வேறு கட்டளைகளின் கீழ் திருகோணமலை நீதவான் நீதி மன்றத்தால் 2010 திசெம்பர் 31 வரை சேகரிக்கப்பட்டு பிரதம செயலாளர் மாகாண வருமான ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்த, ரூபா 176,355 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. சபையினால் பெறப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணங்களைக் கணிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

## 2.2 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மதிப்பிடப்பட்டவை, உள்ளபடியான செலவினம் மற்றும் முரண்கள் என்பன கீழே தரப்படுகின்றன.

| செலவின விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் | மதிப்பிடப் பட்டது | உள்ளபடி யானது | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனங்கள் | 14,996,891 | 13,919,774 | 1,077,117 | 14,188,910 | 10,757,297 | 3,431,613 |
| ஏனையவை | 8,662,144 | 2,642,863 | 6,019,281 | 3,039,000 | 2,444,118 | 594,882 |
| உப மொத்தம் | 23,659,035 | 16,562,637 | 7,096,637 | 17,227,910 | 13,201,415 | 4,026,495 |
| மூலதனச் செலவினம் | 5,492,000 | 4,496,356 | 995,644 | 3,020,500 | 48,935 | 2,971,565 |
| முழு மொத்தம் | 29,151,035 | 21,058,993 | 8,092,042 | 20,248,410 | 13,250,350 | 6,998,060 |

## 2.3 மனித வள முகாமைத்துவம்

### 2.3.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஆளணியின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவிகளின் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | குறைவு/ மிகை |
|---|---|---|---|
| பதவிநிலைத் தரங்கள் | 01 | - | 01 |
| இரண்டாம் தரங்கள் | 20 | 14 | 06 |
| ஆரம்ப தரங்கள் | 33 | 30 | 03 |
| மொத்தம் | 54 | 44 | 10 |

## 2.4 பெறவேண்டிய உத்தியோகத்தர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய உத்தியோகத்தர் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 225,056 ஆன அதேவேளை 03 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருக்கின்ற மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 225,056 ஆக இருந்தது.

## 2.5 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) களஞ்சியம்
(உ) வருமான நிருவாகம்